மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் நிதிக் கோரிக்கையின் மீதான விவாதம் முடிவுற்றது. அடுத்து, வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டுவந்த பிரதான எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. கே. விநயகம் அவர்களும், திரு கே. என். குமாரசாமி அவர்களும் தங்களுடைய இருப்பிடங்களில் இல்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி, திரு. கொ. இர. ஞானசம்பந்தன், திரு சோ. அழகர்சாமி ஆகியோர் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லையாதலால், அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி :—

"கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 66,04,43,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைகின்றன. பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும். 2–24 p.m.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

5. **பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

A. Statutory Rules and Orders.

*88. Audit Report on the Annual Accounts of the Tamil Nadu Electricty Board for the year 1966–67 and Balance Sheet as on 31st March 1967. (*Laid on the Table of the House under section* 69(5) *of the Electricity* (*Supply*) *Act*, 1948 (*Central Act* 54 *of* 1948)].

B. Reports, Notifications and other papers.

†79 Review on Industrial Development in Tamil Nadu 1968–69 (English and Tamil.)

---

* Laid on the Table of the House on 11th March 1969.

Desposited to Members on the 10th March 1969.